# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

**முன்னிலை**: திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 22 ம் தேதி, திங்கள்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆனி மாதம் 08 ஆம் நாள்
CC No.29/2023
(CNR No: TNAL070003752023)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>ஜெயங்கொண்டம் காவல் நிலையம்,<br>குற்ற எண்: 34/2023. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரி | : | குமார் @ ராம்குமார் (54/2026),<br>த/பெ.ராஜமணி, மாரியம்மன் கோவில் தெரு,<br>தண்டலை, உடையார்பாளையம் தாலுக்கா,<br>அரியலூர் மாவட்டம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 448, 294(b), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 448, 294(b), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 23.01.2023 | |
| 4 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 24.01.2023 | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | 24.01.2023 | 30.01.2023 |
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 19.09.2021 | |
| 7 | கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் கீழ் குற்றச் சாட்டு வனைந்து வினவப் பட்ட நாள் | : | 05.08.2023 | |

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.06.22 17:58:20 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | : | 1) எதிரி தரப்பில் U/s.320 Cr.P.C ன் கீழ் 18.06.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.05/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.<br><br>2) அரசு தரப்பில் U/s.311 Cr.P.C ன் கீழ் 18.06.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.06/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.<br><br>2) அரசு தரப்பில் U/s.294 Cr.P.C ன் கீழ் 18.06.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு M.P.No.07/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. | | |
| 9 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப் பட்ட நாள் | : | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 18.06.2026 | 18.06.2026 |
| | | | அ.சா.2 | 18.06.2026 | 18.06.2026 |
| | | | அ.சா.3 | 18.06.2026 | 18.06.2026 |
| | | | அ.சா.4 | 18.06.2026 | 18.06.2026 |
| 10 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் வினவிய நாள் | : | 19.06.2026 | | |

இவ்வழக்கு கடந்த 23.02.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 22.06.2026ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி.C.இராஜேஸ்வரி அவர்கள் முன்னிலையாகிவும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கார்த்திக் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2026.06.22 17:58:27 +0530

## தீர்ப்புரை

1. இவ்வழக்கின் புகார்தாரரின் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 23.01.2023 ம் தேதி இரவு 12.00 மணிக்கு புகார்தாரரும், சாட்சி–2 ம் வீட்டிலிருந்தபோது எதிரி புகார்தாரரின் வீட்டிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்துள்ளார் என்றும், சாட்சி–2 ஏன்டா என் வீட்டிற்குள் நுழைந்தாய் என்று கேட்டதற்கு எதிரி சாட்சி–2 பார்த்து தேவடியா மகனே, குச்சிகாரி மகனே உன் மனைவி எனக்கும் தான் சொந்தம் என்று அசிங்கமாக திட்டிக்கொண்டு கையால் உடம்பில் அடித்தும், புகார்தாரர் சண்டையை விலக்கியபோது எதிரி புகார்தாரரின் தலைமுடியை பிடித்து இழுத்து கையால் உடம்பில் அடித்தும், அருகில் இருந்தவர்கள் ஓடி வரவே எதிரி புகார்தாரரையும், சாட்சி–2 யும் பார்த்து இன்னைக்கு நீங்க தப்பிச்சிட்டீங்க என்னைக்கா இருந்தாலும் உங்களை அடித்து காலி பண்ணாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்துள்ள எதிரியின் செய்கையானது இ.த.ச.பிரிவுகள் 448, 294(b), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் அதனை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படியும், வழக்கினை கோப்பிற்கு எடுத்துக் கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், கு.வி.மு.ச பிரிவு 207 ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), 323, 506(1)மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து, விளக்கி வினவ எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு

சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 320ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கில் உள்ள குற்ற பிரிவுகள் சமாதானம் ஆகாத குற்றம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:–**

7. அ.சா.1 வளர்மதி தனது சாட்சியத்தில் சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் வீட்டிலிருந்தபோது, வீதியில் கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த கும்பலில் யாரோ தன்னையும், தன் கணவரையும் அசிங்கமாகப் பேசி, கையால் தாக்கினார்கள் என்றும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், தங்கள் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததாலும், அவர் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்தான் தங்களை தாக்கியிருக்கக் கூடும் என்று நினைத்து, தான் சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரி மீது காவல் நிலையம் சென்று போலீசாரிடம் புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்ததுதான் என்றும், அதில் உள்ள கையொப்பம் அ.த.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்று சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.2 சிவப்பிரகாசம் தனது சாட்சியத்தில் சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் வீட்டிலிருந்தபோது, வீதியில் கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த கும்பலில் யாரோ தன்னையும், தன் மனைவியையும் அசிங்கமாகப் பேசி, கையால் தாக்கினார்கள் என்றும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், தங்கள் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததாலும், அவர்கள் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்தான் தங்களை தாக்கியிருக்கக் கூடும் என்று

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.06.22 17:58:39 +0530

நினைத்து, தன் மனைவி சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரி மீது காவல் நிலையம் சென்று போலீசாரிடம் புகார் கொடுத்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.3 இளஞ்சியம் தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.4 திரு.தங்கமணி என்பவர் தனது சாட்சியத்தில், வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வக்குமார் என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கின் புகார்தாரர் எதிரியுடன் சமாதானமாகி விட்டபடியாலும், அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, அவர் தயார் செய்து வைத்திருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 24.01.2023ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திரு. செல்வக்குமார் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, வளர்மதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் அ.த.சா.ஆ.2 ஐ பெற்று, நிலைய குற்ற எண் 34/2023, ச/பி.448, 294(b), 323, 506(1) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாகராஜன், சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.த.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில், குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடியபோது, எதிரியை 24.01.2023ம் தேதி மாலை 14.45 மணிக்கு தண்டலை மாரிம்மன் கோவில் தெரு எதிரியின் வீட்டின் முன்பு வைத்து கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து, 12.02.2023ம் தேதி எதிரியின் மீது ச/பி.448, 294(b), 323, 506(1) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச்

சட்டத்தின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

11. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டுவிட்டதாலும், அரசு தரப்பு பட்டியல் சாட்சிகள் 4 முதல் 7 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரிக்க தேவையில்லை என்று கருதி மேற்குறிப்பு செய்ததன் பேரில் அந்த சாட்சிகளை விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

12. எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

13. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

14. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

## தீர்வு

15. எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்களாக அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் அ.சா.1ன் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 23.01.2023ம் தேதி இரவு 12.00 மணிக்கு எதிரி அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்ததாகவும், அ.சா.2 ஐ பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அ.சா.2 ஐ கையால் உடம்பில்

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.06.22 17:58:50 +0530

அடித்தும், அ.சா.1ன் தலைமுடியை பிடித்து இழுத்து கையால் உடம்பில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ பார்த்து இன்னைக்கு நீங்க தப்பிச்சிட்டீங்க என்னைக்கா இருந்தாலும் உங்களை அடித்து காலி பண்ணாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்ததாக கூறிவிட்டு அதற்கு முரண்படும் வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் வீட்டிலிருந்தபோது, வீதியில் கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த கும்பலில் யாரோ தன்னையும், தன் கணவரையும் அசிங்கமாகப் பேசி, கையால் தாக்கினார்கள் என்றும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், தங்கள் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததாலும், அவர் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்தான் தங்களை தாக்கியிருக்கக் கூடும் என்று நினைத்து, தான் சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரி மீது காவல் நிலையம் சென்று போலீசாரிடம் புகார் கொடுத்தேன் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில், அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகளோடு தாங்கள் சமாதானமாகிவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் அரசுதரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள், அவர்களது சாட்சியங்கள் நம்பக்கூடியதாக இல்லையென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. அ.சா.1 முதல் அ.சா.3ன் சாட்சியத்தினை பரிசீலனை செய்கையில், எதிரி தான் அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாகவோ, அ.சா.2ஐ தரக்குறைவாக திட்டியதாகவோ, அ.சா.2ஐ கையால் உடம்பில் அடித்தும், அ.சா.1ஐ பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் அவரது பெண்மைக்கு களங்கம் ஏற்படும் வகையில் தலைமுடியை பிடித்து இழுத்து கையால் உடம்பில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவோ, அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.06.22 17:58:56 +0530

18. எனவே, இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 அரசு தரப்பு வழக்கையும், வழக்கு சம்பவத்தினையும் சார்ந்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் சம்பவம் பற்றி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. முடிவாக எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் இ.த.ச பிரிவுகள் 448, 294(b), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் எதிரி **"குற்றவாளி இல்லை"** என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரவு 248(1)ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

22. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22ம் நாள் வெள்ளிகிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2026.06.22 17:59:02 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

**<u>அட்டவணை : –</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 – வளர்மதி

அ.சா.2 – சிவபிரகாசம்

அ.சா.3 – இளஞ்சியம்

அ.சா.4 – தங்கமணி, காவல் உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.த.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்திலுள்ள உள்ள அ.சா.1ன் கையெழுத்து

அ.த.சா.ஆ.2 – புகார் வாக்குமூலம்

அ.த.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.4 – பார்வை மகசர்

அ.த.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள்</u> :** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்</u> :** இல்லை

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.06.22 17:59:09 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**ஜெயங்கொண்டம்.**

//True Copy//

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.